# சுதந்திரன்

SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
ஆனி 28
ஷஃபா 5
புதன் (12-7-1978)
நிறுவியது 1947
புத்தகம் 32
இதழ் 12
யாழ். தொ.பே.இல. 352
விலை சதம் 35


# “இயக்கத்தின் மனச்சாட்சியாக விளங்குவது சுதந்திரனே! அதிவிரைவில் நாளேடாக மலரவேண்டும்”



## புதிய செயலகத் திறப்புவிழாவில் தமிழ்த் தலைவர்கள் வாழ்த்துரை!

**“தமிழர் விடுதலை இயக்கத்தினதும், இனத்தினதும், மனச்சாட்சியாக இன்று விளங்கிவருவது சுதந்திரன் ஏடும், சுதந்திரன் ஆசிரியரின் எழுத்துக்களுமே என்பதை யாரும் மறுக்கமுடியாது. இந்த நாட்டில் சுதந்திரன் ஊட்டிய தமிழின உணர்ச்சியை, விடுதலை எழுச்சியைபோல வேறு எந்தப் பத்திரிகையோ அல்லது இயக்கங்களோ ஏற்படுத்தியது கிடையாது. இது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை. தமிழ் சமுதாயத்தை ஒரு தெளிவான அரசியல் சிந்தனையின் அடிப்படையில் கடந்த 32 ஆண்டுகளாக சுதந்திரன் நெறிப்படுத்திவருவதை அனைவருமே ஏற்றுக்கொள்வார்கள். சுதந்திரன் நிறுவனம் யாழ்ப்பாணத்துக்கு வந்தது, தமிழீழ விடுதலை நமக்கு விரைவில் கிடைக்கும் என்பதற்கு ஓர் சூசகமான அறிவிப்பாகும்!”**



—மேற்கண்டவாறு யாழ்ப்பாணம் மகாத்மாகாந்தி வீதி 5ம் இலக்கத்தில் சுதந்திரன் நிறுவனத்தின் புதிய செயலகத்தை திறந்துவைத்துப்பேசிய தமிழர் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ. அவர்கள் குறிப்பிட்டார்.

இவ்விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழ்த் தலைவர்கள் அனைவரும் சுதந்திரன் விரைவில் நாளேடாக மலரவேண்டும் என்ற தமிழ் மக்களின் ஆசையை வெளியிட்டார்கள்.

சுதந்திரன் புதிய செயலகத்திறப்புவிழா 10-7-78 திங்கட்கிழமை மாலை 6மணிக்கு இடம்பெற்றது; பெருந்திரளான சுதந்திரன் அபிமானிகள், ஆதரவாளர்கள், அன்பர்கள் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர். தமிழர் தலைவர் திரு அமிர்தலிங்கம் அவர்களுக்கும். யாழ் பா. உ. திரு, வெ, யோகேஸ்வரன் அவர்களுக்கும் சுதந்திரன் நிறுவன ஊழியர்களின் சார்பில் சுதந்திரன் ஆசிரியர்திரு; கோவை மகேசன் மாலை சூட்டி வரவேற்றார். இதைத்தொடர்ந்து நாடாவை வெட்டி புதிய செயலகத்தை திரு, அமிர்தலிங்கம் திறந்து வைத்தார்.

சுதந்திரன் அலுவலகம் அமைத்திட பெருமனதுடன் தனது கட்டடத்தை கொடுத்து உதவிய திரு. காசிப்பிள்ளை கணேசன் மங்கல விளக்கேற்றிவைத்தார். யாழ் பா. உ. திரு. வெ. யோகேஸ்வரன், சுதந்திரன் நிறுவனர் மூதறிஞர் தந்தை செல்வாவின் திருவுருவப் படத்தைத் திரைநீக்கம் செய்துவைத்தார். இதைத் தொடர்ந்து வாழ்த்துரை வழங்கும் வைபவம் டாக்டர். எஸ். ஏ. தர்மலிங்கம் அவர்கள் தலைமையில் ஆரம்பமாகியது. திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் தமிழீழத்தேசிய கீதம்பாடினார்.

சுதந்திரன் நிர்வாக இயக்குனர் திரு. சா. செ; சந்திரகாசன் விழாவுக்கு வந்திருந்தோரை வரவேற்றுஉரை நிகழ்த்தினார். அவர் கூறியதாவது!—

“இந்த விழாவை இரு நோக்கங்களுக்காக ஏற்பாடு செய்தோம்; ஒன்று நமது சுதந்திரன் பத்திரிகைநிறுவனம் யாழ்ப்பாணத்தில் புதிய செயலகத்தில் இயங்குவதை மக்களுக்கு தெரியப்படுத்துவது; அடுத்தது, சிங்கள சிறீலங்காவிலிருந்து கடந்த 30 ஆண்டுகளாக வெளியிடப்பட்டுவந்த சுதந்திரன், தமிழீழத்துக்கு மாற்றப்பட்டதன் மூலம், மற்றவர்களையும் தமிழ்ஈழத்துக்கு தங்கள் முதலீடுகளை மாற்றுவதற்கு ஒரு தூண்டுதலாக இந்த விழா அமையவேண்டும் என்பது, சுதந்திரன் செயலகத்தை இந்த இடத்தில் நிறுவுவதற்கு உதவியும், ஒத்துழைப்பும் தந்த சகலருக்கும் எமது நன்றியுரியது. சுதந்திரன் பத்திரிகை திறமையாக வெளிவருவதற்கு பொறுப்புநான் அல்ல; சுதந்திரனில் பணியாற்றும் ஊழியர்களுக்கே இந்தப் பாராட்டு உரியது. அவர்கள் ஒவ்வொருவரும் தத்தமது பொறுப்புக்களை சரிவரச் செய்வதனால்தான் சுதந்திரன் வெற்றிநடைபோட முடிகிறதுஎன்றார்.

காவலூரர் பா. உ. பண்டிதர் கா, பொ. இரத்தினம் பேசுகையில், இந்த நாட்டில் தமிழினத்தின் விடுதலைக் கோரிக்கை பற்றி சிங்கள அரசுக்கு அஞ்சாமல் துணிவுடன் எடுத்துரைத்துவரும் ஒரே ஏடு சுதந்திரன் என்றும், தந்தையின் காலத்தில் கொழும்பிலிருந்து வெளிவந்த சுதந்திரன் மகன் காலத்தில் தமிழீழத்துக்கு வந்துவிட்டதென்றும் விரைவில் அது நாளேடாக மலர வேண்டும் என்றும் கூறினார்.

சட்டத்தரணி இ. விசுவநாதன் பேசுகையில், தமிழினத்தின் ஒற்றுமையை கட்டிக்காத்து வருவது சுதந்திரனேயென்று பாராட்டுத் தெரிவித்தார்.



சிந்தனைச் சிற்பி திரு. சி. கதிரவேற்பிள்ளை பா. உ. பேசுகையில் கூறியதாவது.

“தமிழ் ஈழத்தின் விடுதலைக்காக பேசுவதற்கு இன்று ஒரேயொரு பத்திரிகையே இருக்கிறது. அது சுதந்திரன் பத்திரிகை தான். சுதந்திரன் பத்திரிகையை தமிழ் ஈழத்துக்கு கொண்டுவர வேண்டுமென்று தந்தை செல்வாவுடன் பலகாலமாக சண்டைபிடித்து வந்திருக்கின்றேன். இன்று அதுநிறைவேறி விட்டது.

“சிங்கள சிறீலங்காவில் தமிழர்கள் தொடர்ந்து வாழுவது அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லாததுமட்டுமன்றி, அவர்களை பணயகைதிகளாக காட்டித் தமிழீழ விடுதலைப் போராட்டத்தையே முறியடிக்க அரசும், சிங்களவர்களும் முயற்சிக்கின்றனர். ஆகவே சிங்கள நாட்டில் இருந்து ஆடுமாடு போல வெட்டுப்படாமல், தமிழர்கள் ... ஈழத்துக்கு வந்துவிடுவது நல்லது.”

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் உரையாற்றுகையில்—தமிழினத்தை விடுதலையென்ற ஒரேயொரு திசையை நோக்கிச் செலுத்தும் இளைய வீரனாக சுதந்திரன் விளங்குவதாகவும் தூங்கிக்கிடக்கும் தமிழர்களையெல்லாம் தட்டியெழுப்பி விடுதலைப்பாதையில் செலுத்தி வைக்கும் ஆற்றல் சுதந்திரன் ஆசிரியரின் பேனாவுக்கே உண்டு என்றும் கூறினார்.

யாழ் பா. உ. திரு. வெ. யோகேஸ்வரன் பேசுகையில் தமிழ் மக்களிடையே செல்வாக்குள்ள பத்திரிகை சுதந்திரன் என்றும், தமிழ் மக்களை அது சரியான பாதையில் வழி நடத்தி வருவதாகவும் பாராட்டினார்.

தமிழர் தலைவர் திரு; அமிர்தலிங்கம் பா, உ. அவர்கள் தமது வாழ்த்துரையில் கூறியதாவது!

சுதந்திரனுக்கும் எனக்கும் உள்ள தொடர்பு இன்று நேற்று ஏற்பட்டதல்ல; உண்மையில் தந்தை செல்வா அவர்களிடம் என்னைக் கொண்டு சேர்க்க காரணமாக இருந்தது சுதந்திரனே. சுயநிர்ணய உரிமை பற்றி 1947ம் ஆண்டு, அப்போது நாளேடாக வெளிவந்த சுதந்திரனில் நான் எழுதியிருந்த ஒரு கட்டுரையை படித்துவிட்டுத்தான், தந்தை செல்வா என்னைப்பார்க்க வேண்டுமென்று விரும்பி அழைத்தார். சுதந்திரனில் வெளிவந்த அக்கட்டுரைதான் என்னையும் தந்தை செல்வாவையும் ஒன்று சேர்த்தது.

“ஏழு இலட்ச ரூபாவை நட்டமாக்கிய போதிலும், தமிழினத்துக்காக பேசுவதற்கு ஒருபத்திரிகை இருந்தேயாக வேண்டுமென்ற பிடிவாதத்துடன் சுதந்திரன் பத்திரிகையை தந்தை செல்வா தொடர்ந்துநடத்தி வந்தார். தந்தை அவர்கள் உயிருக்குயிராக கருதிவந்த சுதந்திரனை இதழை தொடர்ந்து இன்று அவரது மகன் திரு, சந்திரகாசன் நடத்திவருவதற்கு தமிழினம் அவருக்கு கடமைப்பட்டுள்ளது.

இந்த நாட்டில் தமிழினத்தை ஒரு நிலையான அரசியல் சிந்தனையின் பின்னால் வழி நட்த்தி வரும் ஒரேயொரு பத்திரிகை சுதந்திரனே. தமிழின எழுச்சியையும், விடுதலை உணர்ச்சியையும் மக்களிடையே கட்டிவளர்த்த, வளர்த்து வரும் பெருமை வேறு எந்த இயக்கத்தையும் விட சுதந்திரனுக்கே உரியதாகும். சுதந்திரனுக்கும், அதன் ஆசிரியரின் திறமைக்கும் ஈழத்தில் மட்டுமல்ல,— தமிழ் நாட்டிலும் மற்றும் கடல் கடந்த நாடுகளிலும் பெரும் வரவேற்பு உண்டு.

சுதந்திரன் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அதிகாரபூர்வ ஏடாக இல்லாமலிருந்த போதிலும்— அதில் இடம்பெறும் அத்தனை கருத்துக்களும் கூட்டணியின் கருத்துக்களாக இல்லாவிட்டாலும்— ஒரு உண்மையை யாரும் மறுக்க முடியாது.



தமிழ் இனத்தினதும், தமிழர் விடுதலை இயக்கத்தினதும் மனச்சாட்சியாக சுதந்திரனும் அதன் ஆசியரின் எழுத்துக்களும் விளங்குவதை யாராலும் மறுக்கவோ, மறைக்கவோமுடியாது.

—4-ம் பக்கம் பார்க்க

**10-7-78**
முதல் சுதந்திரன்
புதிய முகவரி:-
5, மகாத்மா காந்தி வீதி,
யாழ்ப்பாணம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருஞ்சித்திரனார் விடுத்த கேள்விகளும்! தலைவர் அமிர் அளித்த பதில்களும்!

(சென்ற இதழ் தொடர்ச்சி)

கே: தந்தை செல்வாவின் காலத்துக்குள் தமிழ் ஈழம் கிடைக்கும் என்று நம்பியிருந்தோம் ஆனால் கிடைக்கவில்லை. இனி உங்கள் காலத்திலேயாவது தமிழ் ஈழம் கிடைக்கும் வாய்ப்பைப் பெறுவோமா என்று உங்களிடம் கேட்கவிரும்புகின்றேன்.

அமிர். தந்தைசெல்வாவே கூறினார். தன்னுடைய காலத்தில் தமிழ் ஈழம் கிடைக்காவிட்டாலும் என்னுடைய காலத்தில்தமிழ்ஈழம் கிடைக்கும் என்று. நானும்நம்புகின்றேன். எங்களுடைய காலத்தில் நிச்சயம் தமிழ் ஈழம் காண்போம் என்று.

கே: மிக்க மகிழ்ச்சி உங்கள் குறிக்கோள் வெற்றி கொள்ள வேண்டும் என்பதில் நானும் ஒரு விடுதலை போராட்ட உணர்வுடையவன் என்றவகையில் உங்கள் குறிக்கோள் வெல்லவேண்டுமென்று மனமார வாழ்த்துகின்றேன். தமிழ் ஈழம் கிடைக்கச் செய்யும் போராட்டத்தில் தமிழக மக்கள் தமிழகத்தலைவர்கள் உங்களுக்கு துணைவருவார்கள் என்று நம்புகிறீர்களா? அவ்வாறு கொள்ளும் நம்பிக்கைக்கு அடிப்படையான காரணம் என்ன?

அமிர்: இன்றைய தமிழகம் இருக்கும் நிலையில் யாரும்எமக்கு துணைவருவார்கள் என்ற நம்பிக்கை எமக்கில்லை. அதுவும் இந்தியா அனைத்திந்திய அரசின் ஆதிக்கத்திற்குட்பட்டு—தமக்குள்ளேயே ஒற்றுமை அற்ற ஒரு இனமாக, பதவிப்போட்டி



கள் மலிந்த ஒரு நாடாக தமிழ்நாடு உள்ளது. இந்தச் சூழ்நிலையில் எமக்கும் துணை வருவார்கள் என்று நாம் நினைக்க முடியாது. ஆனால் இங்கே ஒரு போராட்டத்தை நடத்தி நாம் துன்புறுத்தப்படுகின்ற அந்நேரத்தில் நிச்சயமாகத் தமிழகத்தில் பொது மக்கள் எழுச்சி அனுதாபத்துடன் பொங்கிஎழும் நிலை வரும் என்று நான் நம்புகின்றேன். அந்த எழுச்சி அனைத்திந்திய அரசையும் எங்களுடைய கோரிக்கையில் எமக்குப்பாதகமாக செயற்படாது தடுக்கும் என்று நினைக்கின்றேன். இதற்கு மேலாக நான் எதையும் அவர்கள் செய்வார்கள் என்று எதிர்பார்க்கவில்லை.

கே: தமிழீழம் பெற்ற பின் உங்கள் ஆட்சி சிங்கள அரசுடன் எவ்வாறு அமைய வேண்டுமென்று நினைக்கிறீர்கள்.

அமிர்: எங்கள் ஆட்சி சிங்கள அரசுடன் நட்புறவுடன் இயங்க வேண்டுமென்பது எங்களுடைய விருப்பம். ஏனெனில் பொதுவான பல பொருளாதாரப் பிரச்சினைகள் உண்டு. இன்றைக்கு வங்காளத்தேசத்திற்கும் இந்தியாவிற்கும் இடையில் கங்கை நீரை பங்கிடுவதால் உள்ள பிரச்சினை போன்ற பல பிரச்சனைகள் தமிழீழத்துக்கும் சிறிலங்காவுக்கும் இடையிலுள்ளது. ஆனபடியால் நற்புறவுடன் வாழ விரும்புகிறோம். அந்த நற்புறவு தமிழீழம் அமைந்த பின்பும் ஏற்படும் என்பதை நாம் நம்புகிறோம்.

கே: நீங்கள் விரும்பும் தமிழீழம் தற்போது இருக்கும் குடியரசின் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவிடம் இருந்து கிடைக்கும் [illegible] திலேயே பெற்று விட முடியும் என்றநம்பிக்கை உங்களுக்கு உண்டா?

அமிர்: இப்போது இருக்கும் குடியரசின் தலைவர் தமிழீழம தருவார் என்று நான் நமபவவலை. அவா தமிழ் மொழிக்கு சில உரிமைகளும மேலும் சில அதிகாரங்களையும் மிகக்குறைவாகத்தந்து சில திட்டங்களையும் தநது தமிழ் மக்களை திருப்திப படுததிவிடலாம் எனறு நினைககின்றார், அப்படி அவர் ஏதாவது திட்டங்களைக் கொண்டு வந்தால் அது தமிழீழத்தின் விடுதலைப் போரை பலவீனப்படுத்தி விடும என்றுகூட நினைககின்றேன். ஆனால் அந்த நேரத்தில் அவர் அளிக்க இருந்த உரிமைகளை நாம் கெடுத்தோம் என்று உலகின் முன்னிலையில் பேசுவதற்கு நாம் இடம் அளிக்கவிருமபவில்லை அதனால் தான் அவர் என்ன செய்கின்றார் என்பதனைப் பொறுத்திருந்து பார்ப்போம். என்று நாம் உலகத்துக்குக் கூறிக்கொண்டிருக்கின்றோம்.

கே: தமிழகத்தில் கலைஞர் கருணாநிதியின் அரசு மீண்டும் நிறுவப்படுமாயின் அவர் உங்களுக்கு அல்லது உங்கள் விடுதலை இளைஞருக்கு ஏதாவது வகையில் உதவுவார்என நீங்கள் நம்புகிறீர்களா?

அமிர்: இன்று இருக்கின்ற அதிகாரங்களுடன் கூடிய தமிழக அரசுஎதுவும் எமக்கு நேரடியாக உதவும் நிலையில் இல்லை. ஆனால் வேறு எந்த அரசிலும் பார்க்க கலைஞர் கருணாநிதியுடைய தலைமையில் உள்ள தமிழக அரசு ஈழத் தமிழர்களுக்கு இன உணர்வுடனும், கூடிய அனுதாபத்தையும், ஆதரவையும் கொடுத்து தங்களால் இயன்றளவு உதவி செய்யும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

கே: தமிழக அரசிடம் இருந்தோ - இந்திய அரசிடமிருந்தோ உங்கள்விடுதலைப் போராட்டத்திற்குஏதாவது உதவி கிடைக்கவில்லையானால் நீங்கள் தனித்து நின்று உங்கள் நிலைமைகளைச் சமாளிக்கக்கூடிய வல்லமை உங்களுக்கு அல்லது இளைஞர்களுக்கு உண்டா? அல்லது வேறு ஏதாவது வல்லரசுகளின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளை நீங்கள் மேற்கொண்டுள்ளீர்களா?

அமிர்: நாங்கள் உலக நாடுகள் பலவற்றிலும் அனுதாபத்தைப் பெறுவதற்கு நினைத்துள்ளோம், ஆனால் அந்த நாடுகளில் நேரடித் தலையீடு ஏற்படும் நிலைமை உண்டாகுமா இல்லையா? என்பதை நான் இப்போது கூற முடியாது. ஆனால் எந்த வகையிலாவது வங்காள தேசத்துக்கு இந்தியதலையீடு இனறி விடுதலை கிடைததிருக்க முடியாது. அநத போல தமிழீழததின் விடுதலைக்கு வேறு நாடுகளின தலையீடு அவசியம் எனற கட்டம ஏற்படுமானால் நாம அந்த உதவியைபபெறுவதறகு பின்நிற்க மாட்டோம் எனறு மட்டும கூற முடியும், அதறகு மேல இபபொழுது நான ஒன்றும் சொல்வதறகில்லை.

கே: இறுதியாக தென் மொழி வாயிலாக தமிழக மககளுக்கு நீங்கள் கூறும் செய்தி என்ன?

அமிர்: தமிழக மக்கள் 4 கோடிக்கு மேற்பட்டவர்களாக இருந்தாலும் அவர்கள் இன்று வட நாட்டு ஆட்



சியில் சுதந்திரமற்ற ஒரு நாடாகத்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் ஈழம் வாழ் தமிழ் மக்கள் தமது இரத்த பாசமுள்ள சகோதரர்களாக அவர்களை என்றும் கருதி அவர்கள் வாழ்வும், தமது வாழ்வும் பிணைக்கப்பட்டதாகவே என்றும் கருதிக்கொண்டிருக்கிறார்கள். பண்டைய ஈழத்தமிழகத்தின் சரித்திரத்தைஎடுத்துப்பார்த்தால் தமிழகத்தின் வரலாற்றோடு ஈழத்தமிழர்களின் வரலாறு பின்னிப் பிணைந்துள்ளதை நாம் காணலாம்.

ஆனால் தமிழகம் சுதந்திரமடைய முன்பு தமிழ் ஈழம் விடுதலை பெறும் என்ற நம்பிக்கையும் எமக்குண்டு. அந்த தமிழ் ஈழத்தின் விடுதலை வாயிலாக தமிழகத்திற்கும் விடுதலை கிடைக்க வழி ஏற்படக்கூடும் என நாம் எதிர் பார்க்கின்றோம்.

பெருஞ்சித்திரனார்: சரி. மிக்க மகிழ்ச்சி, இப்பேருரையை உங்களிடத்தில் நான் பெற்றதற்கு உங்களுக்கும், உங்கள் துணிந்த நெஞ்சிற்கும் உங்களைச்சார்ந்திருக்கின்ற ஆயிரக்கணக்கான விடுதலை உணர்வுமிக்க இளைஞர்களுக்கும் ஈழமக்களுக்கும். தமிழக மக்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.





## சுதந்திரனிலேயே 'தமிழ்க் கொலைகள்' இடம்பெறலாமா?

சுதந்திரன் ஆசிரியர்,
யாழ்ப்பாணம்.

நீங்கள் வெளியிட்ட 28-6-78 சுதந்திரன் ஏட்டை வாசித்தேன் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. காரணம் நானும் மட்டுநகரைச் சேர்ந்தவன். ஒவ்வொரு வெளியீட்டையும் ஆவலாக எதிர் பார்த்து உணர்ச்சியுடன் வாசிக்கும் இளைஞர்களில் நானும் ஒருவன்.

முதல்பக்க முன்வரி பெரிய எழுத்துக்களிலேயே பெரிய இரண்டு கருத்துக்கொண்ட வரிகள் இருந்தன.

அன்னைபச்சொறிந்ததுமட்டு நகர் என்பதுதான் அது; "தமிழ்க்கொலை" செய்கிறார்கள் என்றெல்லாம் வெளியிடும்தனித்தமிழ்ஏடான 'சுதந்திரன்' இப்படிச் செய்யுமா என்பதுதான் எனக்குத் துக்கம், இதை ஆசிரியர் கவனிப்பாரா? இனிமேலாவது முகவரிகளிலேயும்சரி - மற்றும் பத்திரிகையிலும் சரி பிழைகள் வராமல் பார்த்துக்கொண்டு — நாங்கள் விரும்பும்சுதந்திரனை தமிழ்ப் பிழைகள் இன்றிக் காப்பாற்றவேண்டும் எனத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

—பி. எஸ். ரி. மூர்த்தி

258, டாம் வீதி.
கொழும்பு-12.

●

ஆசிரியர் அவர்கட்கு.
சுதந்திரன் காரியாலயம்,
யாழ்ப்பாணம்.

ஐயா.

தலையங்கத்திற்கு ஏற்ப விடயம் எழுதத் தெரியாவிடில் மேற்படி பதவியில் இருந்து தாங்கள் விலகிக் கொள்வது தங்களுக்கு நன்மை பயக்கும் என்பதுடன் தமிழ் இனத்திற்கும் அது பெரிதும் உதவியாகும்.

28-6-78ம் தேதி சுதந்திரனின் 1-ம் பக்கத்தில், "மட்டக்களப்பு தொகுதி கிளைக்கு இராசதுலைவர், காசி செயலாளர் நீண்டகால பிரச்சினைக்கு சமரசத் தீர்வு"

என்னும் தலையங்கத்தின் கீழ் தாங்கள் எழுதிய விடயத்தை தயைசெய்து திருப்பிப்பாருங்கள். தலையங்கத்திற்கும் விடயத்திற்கு ஏதாவது தொடர்பு உண்டா?

தலையங்கத்திற்கு ஏற்ற விடயம் எழுத முடியாவிடில் தயைசெய்து பதவியில் இருந்தும் விலகிவிடுங்கள். இனத்தின் விடுதலைக்காக போரிட ஒன்றுபட்ட மக்களை இரண்டு படுத்தும் செய்கையில் இறங்காதீர்கள்.

—பி மார்க்குப்பிள்ளை
முல்லைத்தீவு.

●

சுதந்திரன் ஆசிரியர்,
யாழ்ப்பாணம்.

2-7-78 சுதந்திரன் இதழில் வந்த "புகையிரதத்தில் இராணுவ அட்டகாசம் செய்தியில் இராணுவக் காடையரை 'வீரர்' எனறுவர்ணிப்பதைக் கண்டு வியப்பும் வேதனையும் அடைகிறேன். இந்தச் சிங்கள இராணுவக் குண்டர்கள் 'வீரர்' என்ற அடைமொழிக்குத் தகுதியுள்ளவர்களா? காக்கிச் சீருடை சப்பாத்து அணிந்து கொலைக்கருவிகள் தாங்கி வாழ்பவர்கள் வீரர்களா? 'வீரன்', 'வீரர்' என்ற தமிழ்ச் சொற்களின் சிறப்பைக் கெடுத்துவிட்டீர்களே. வியாபார நோக்குடன், அரசுக்குப் பந்தம் பிடிக்கும் தமிழ் ஏடுகள் இப்படி எழுதுகிறார்கள் என்றால், தமிழரின் சுதந்திரத்தையும், மானத்தையும் தலையாகக்கொண்ட சுதந்திரன் ஏட்டிலும் இந்தப் பிழை நுழையலாமா?

இனிமேல் எப்போதாவது இப்பிழை ஏற்படாது பார்த்துக்கொள்ளவும். உதவி ஆசிரியர்கள் எல்லோருக்கும் இதை அறிவித்துவைக்கவும், "இராணுவத்தினர்" என்று குறிப்பிட்டால் போதுமானது.

—செ. தோ. சிற்றம்பலம்
ஊர்காவற்றுறை.

மில்க்வைற் செய்தி - இதழ் 31

10 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 பார்சோப் அல்லது 2 நீம் சோப் அல்லது 2 மெடிக்கேற்றட் அல்லது 2 சலவைப்பவுடர் மேலுறைகளை அனுப்பி மேற்படி செய்தி இதழைப் பெற்றுக்கொள்ளுங்கள்,

மில்க்வைற் — யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடியரசுத் தலைவருக்கு ஒரு பகிரங்கக் கடிதம்;

## விடுப்பவர் யாழ்வளாக மாணவர் மன்றத் தலைவர் ஜெயபாலன்

மாண்பு மிகு குடியரசுத் தலைவர் அவர்களே!

27-06-78ம் திகதியன்று இரவு யாழ்ப்பாணம் கொழும்பு தபால், வண்டியில் தங்களது ஆயுதப்படையைச் சேர்ந்த ஒருவனது பொறுப்பற்ற செயலினல் தமிழ் பேசும் யாழ்ப்பாணவாசி ஒருவர் மரணித்த சம்பவம் தொடர்பாகவும் மூவர் காயப்படுத்தப்பட்டதும் தொடர்பாகவும், எமது வன்மையான கண்டனத்தை தங்கள் அரசுக்குத் தெரிவிக்கின்ருேம், தொடர்ந்து எமது நாட்டில் நடந்து வரும் சம்பவங்கள் ஆயுதப்படைகளின் கண்ணுேட்டத்தில் இலங்கையின் தமிழ்மக்களின் உயிரின் பெறுமதி கிட்லரது ஜேர்மனியில் யூத மக்களது உயிரின் பெறுமதிக்கு இருந்த ஒரு நிலையை நோக்கி தாழ்ந்து வருவதாகவே கருத நேருகின்றது.

அவசியமின்றி தமிழ் மக்கள் ஆயுதப்படையினரால் துன்புறுத்தப்படுவதும், கொலை செய்யப்படுவதும், இலங்கையில் நீண்ட காலமாக நடந்து வருகின்றது. இதில் மிக முக்கியமான விசயம் என்னவெனின் மேற்படி சம்பவங்கள் தொடர்பாக ஆயுதப்படைகள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லையென்றும் இத்தகைய சம்பவங்கள் தொடர்பாக குற்றஞ் சாட்டப்படுபவர்கள் உடனடியாக பதவி உயர்வு பெறுவதும் தான், கடந்த கால விசாரணைகள் பலவற்றில் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர்.

1977 ஆகஸ்டில் நடந்த சம்பவங்கள் தொடர்பாக சன்சோனிக் கமிசன் முன் தங்களது ஆயுதப் படைகளைச் சேர்ந்த எத்தனை பேர் மீது குற்றஞ் சாட்டப் பட்டுள்ளது என்பதையும் மேற்படி கொமிசன் அறிக்கை வெளிவருமுன்னரே அவர்களுள் எத்தனை பேர் பதவி உயர்வு பெற்றுள்ளனர் என்பதையும் வெளியிடுவீர்களானல் தொடர்ந்தும் இத்தகைய சம்பவங்களில் ஈடுபடுவதிலிருந்து தங்களது ஆயுதப் படையினர் எச்சரிக்கைப் பட்டுள்ளார்களா அல்லது ஊக்குவிக்கப்பட்டுள்ளார்களா என்பது தெரிய வரும்.

மேலும் இனவாதியான சிறிமாவோ அம்மையாரின் காலத்தில் ஆயுதப் படையினரின் நடவடிக்கைகளால் யாழ்முற்றவெளியில் 9பேர் உயிர் இழந்தார்கள் என்பதையும் இதுபற்றிஒருகொமிசன் விசாரணைக்கு உத்தரவிடவே அந்த இனவாதியான பிரதமர் முன் வரவில்லையென்பதையும் இத்தருணத்தில் ஞாபகப் படுத்துவதுடன் இச் சம்பவத்துக்கு பொறுப்பேற்க வேண்டியவர்கள் பதவி உயர்த்தப்பட்டனர் என்பதையும் இத்தருணத்தில் ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். இதன் பின் செம்மணியில் வைத்து நல்லூர்த் திருவிழாவில் இருந்து திரும்பிய பரராஜா என்பவர் ஆயுதப் படையினரால் படுகொலை செய்யப் பட்டது தொடர்பாகவும், இனவாதியான சிறிமாவோவின் அரசாங்கம் உரிய நடவடிக்கைகள் எடுக்க வில்லை.

யாழ்ப்பாணத்தில் பெரியார்களின் சிலைகளும், நினைவுச் சின்னங்களும் ஆகஸ்ட் 77ல் ஆயுதப் படைகளால் தகர்க்கப்பட்டன என்பதையும் தாங்கள் அறிவீர்களா? இது பற்றி அரச தரப்பினர் எவ்வித அக்கறையும் கொள்ளவில்லை என்பதையும் இத்தருணத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

போதிய காரணமின்றி தமிழ் இளைஞர்களை கைது செய்வதும் உரிய காலத்திலும் நீதிமன்றத்தின் முன் சமர்பிக்காமல் தலைகீழாக கட்டி வைத்து தீயிடுதல் போன்ற மனிதாபிமானற்ற கொடுமைகளை இழைப்பதிலும் தங்களது இரகசியக் காவல்துறையினர் கிட்லரின் எஸ் எஸ். படையினரை விட திறமைசாலிகளாகவுள்ளனர். இவர்களது நடவடிக்கைகள் பற்றி அவ்வப் பகுதி காவல்துறை நிலையங்களில் கூட தகவலறிந்திருக்கவில்லை என்பதும் தாங்கள் அறியவேண்டிய தொன்ருகும். மேலும் அரசசேவையில் இருந்தவர்களையும் சாதாரணமாக நடமாடுபவர்களையும் தேடப் படுகின்றவர்களென்று சுவரொட்டிகள் ஒட்டியதன் மூலம் தங்கள் இரகசியக் காவல் துறையினர் தங்கள் காவல் துறைப் படையை கேலிக்கு இடமாக்கியுள்ளார்கள்என்பதை அறிவீர்களா?

27-06-78ல் யாழ் ரயில் வண்டியில் நடந்த மரணம் தொடர்பாக இராணுவத்தினர் மீதுஎன்ன நடவடிக்கைகளெடுத்துள்ளீர்கள் என்பதை எமக்கு அறிவிக்குமாறு கேட்டுக் கொள்வதுடன்; தொடர்ந்தும் ஆயுதப் படையைச்சேர்ந்த காடையர்களுக்கும் கொலைகாரர்களுக்கும் அரசு மௌனம் சாதிக்குமாளுல் அதனல் ஏற்படக் கூடிய தேசிய சர்வதேசிய, விளைவுகளுக்கு தங்கள் அரசே பொறுப்பேற்றல் வேண்டும்.

தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஆக்கிரமிக்கப்பட்ட மக்கள் போல வாழ வேண்டும் என தங்கள் அரசு கருதினல் தமிழ் மக்களது பிரிவினை ரோசம் சர்வதேச ரீதியான நியாயத்தையும் முக்கியத்துவத்தையும் பெறுதல் சாத்தியமாகும், என்பதையும் குறிப்பிடுவது அவசியம் அகதிகள் புனர்வாழ்வு பணிகளில் ஈடுபட்டிருந்த போது கன்னுட்டியில் வைத்து கைது செய்யப் பட்ட எமது வளாக மாணவன் வீரசிங்கம், குணசேகரத்தை விடுதலை செய்யுமாறும் அல்லது விசாரணைகளை துரிதப்படுத்துமாறும் இத்தருணத்தில் வலியுறுத்துகின்ருேம். தங்களிடமிருந்து நல்ல பதிலை எதிர் பார்க்கின்றேன்.

—வ.ஐ.ச. ஜெயபாலன்,
தலைவர், மாணவர் மன்றம்,
யாழ் வளாகம்,

# வன்னித் திருநாடு வரவேற்கிறது

15-7-78ல்வருகை தரும் பொதுச்சபை உறுப்பினர்களையும் எமது தலைவர்களையும்;

வருக வருக என வரவேற்கின்றது வன்னி நகர்! எல்லை நகர்!

அடங்காப்பற்று பண்டாரவன்னியன் ஆண்ட இப் புனித மண்ணில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபைக் கூட்டம்நடைபெறுவதையிட்டு வன்னி மக்களாகிய நாம் பூரிப்படைகின்ருேம்,

தந்தை செல்வா உருவாக்கிய! இவ் இயக்கத்தை சிதறடிக்கும் வகையில் ஒரு பொதுச்சபை உறுப்பினரோ, தலைவர்களோ, பொதுச்சபை உறுப்பினர் தெரிவில். நடந்து கொள்ளக் கூடாது. என மறைந்த தலைவர்களின் பெயரால் வேண்டுகின்ருேம். அவர்கள் விட்டுச் சென்ற பணியோ தமிழ் ஈழம்! என்பதை மறவாமல் எம்மை வழி நடத்தும் நாயகங்களே! எம்மைவழிநடத்துங்கள்!

பதவிகளோ, பட்டங்களோ எமக்கு தேவையில்லை எமக்கு தேவை தமிழ் ஈழம் என்னும் தாராக மந்திரத்தை மறவாமல் வன்னி நகர் புனித எல்லையில்காலடி எடுத்து வைக்கும்படி பணிவன்புடன்வேண்டுகின்ருேம்.

வருக. வருக. என மீண்டும் வரவேற்கின்றனர் வன்னி நகர் மக்கள்!

—வன்னிலிங்கன்,
பண்டாரி குளம்,
வவுனியா.

# விடுதலை இயக்கத்தை பிளவுபடுத்தும் சூழ்ச்சிக்கு பலியாகாதீர்!

—கதிரவேற்பிள்ளை

அண்மையில் ஜனதா விமுக்தி பெரமுனையின் பிரமுகர் திரு. போபகே அவர்கள் தமிழ் இளைஞர்களை அழைத்து யாழ்ப்பாணத்தில் ஓர் அரசியல் வகுப்பை நடத்திஞர். அப்போது தமிழ் இளைஞர்கள் அவரிடம் தமிழ் ஈழத்தின் சுதந்திரப் போராட்டத்தை ஆதரிப்பீர்களா? என்று விஞவிஞவிஞர்கள்; தமிழ்ஈழம் சுதந்திரம் கோருவதையும் அதற்கான விடுதலைப்போராட்டத்தையும்வரவேற்பதாகவும் ஆஞல் விடுதலைப் போராட்டம் அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்ருல் தாம் அதை ஆதரிக்கமுடியாதென்றும், கவிஞர் காசியின் தலைமையில் நடப்பதாயின் தமது பூரண ஆதரவு கிடைக்குமென்று அவர் கூறியதாகவும் அவரது கூற்றுப் பற்றி கருத்துரைக்க முடியுமா என்று த. வி. கூ. தலைமைப் பணியக கருத்தரங்கில் சிந்தனைச்சிற்பி திரு. சி. கதிரவேற்பிள்ளையிடம் கேட்கப்பட்டது.

"தமிழ் ஈழத்தை ஏற்றுக் கொள்ளாத சிங்கள அரசியல்வாதிகளை நம்பிஞலும், தமிழ் ஈழத்தின் சுதந்திரப் போராட்டத்தை ஆதரிப்பதாகக் கூறிக்கொண்டே போராட்டம் அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறக் கூடாது; வேருெருவர் தலைமையில்தான் நடைபெற வேண்டுமென்று கூறுபவனை நம்பாதே! அவன் தமிழ்ஈழ விடுதலை இயக்கத்தில் மித்திரபேதம் செய்து இயக்கத்தைப் பிளவுபடுத்தவே முற்படுகிருன். விடுதலை இயக்கத்தை கூறுபோடும் தந்திரம்தான் அமிர் வேண்டாம் வேறு எவரையாவது

—4-ம் பக்கம் பார்க்க

# திருகோணமலை இந்து இளைஞர் மன்றம் நிதி வசூலிப்பு!

திருகோணமலை இந்து மயானத்தை நிர்வகித்து வரும் திருகோணமலை இந்து இளைஞர் மன்றம் அதன் நிர்வாகச் செலவுகளுக்காக நகரத்தில் இருக்கும் இந்துக் குடும்பங்கள் அனைத்திலும் இருந்து வருடசந்தா ரூபாய் 10/- இம்மாதம் 22ல் வசூலிக்க இருக்கின்ருர்கள்,

நகரை 23 பிரிவுகளாக வகுத்து ஏறத்தாழ 100 தொண்டர்கள் மூலம் மேற் குறிப்பிட்ட திகதியில் வசூலிப்பார்கள் இவ்வருட இலக்கு ரூபா 10,000.

இதற்கான சகல அறிவித்தல்களும் அடங்கிய கடிதங்கள் 3500 இந்துக் குடும்பங்களுக்கும் தனித்தனியாக அனுப்பியிருக்கின்ருர்கள்.

இதில் வரும் பணத்தைக் கொண்டு இத்துமயான பாதுகாவலருக்கு வேதனமும் வேறு திருத்த வேலைகளையும் செய்வதுடன் மயானத்தை சுற்றி மதில் அமைக்கவும் திட்டமிட்டுள்ளார்கள்-

மேற்படி நிதி சேகரிப்பில் ஈடுபடும் இளைஞர்களுக்கு ஆதரவு நல்குமாறு திருகோணமலை தே. பே. உறுப்பினர் திரு. இரா; சம்பந்தன் இந்து மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்,

# உதயசூரியன் நாடக மன்றத்தின் 15வது ஆண்டு விழா!

எதிர்வரும் (17-7-78) ஆடிப்பிறப்பிலன்று 15வது ஆண்டு விழாவை முன்னிட்டு உதய சூரியன் நாடக மன்றம் முல்லைத்திவுத் தொகுதியில் உள்ள மன்றங்களுக்கிடையே ஓர் நாடகப்போட்டியை நடாத்துகின்றது. அதில்சிறந்த நாடகங்களுக்கு முறையே தங்கப்பதக்கம், வெள்ளிப்பதக்கம், வெங்கலப்பதக்கம் ஆகியவற்றையும், இன்னும் சிறந்தகதை சிறந்த நடிகர் ஆகியவற்றிற்கும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படுவார்கள்.

இவ்விழாவிற்கு பிரதம அதிதியாக முல்லைத்திவுத் தொகுதி தேசியப் பேரவை உறுப்பினர் திரு. எக்ஸ். எம், செல்லத்தம்பு அவர்கள் வருகைதந்து போட்டிக்கான பரிசில்களை வழங்குவார். பாண்டியன் குளம் உதவி அரசாங்க அதிபர் திரு. குலேந்திரா அவர்களின் தலைமையில் நடைபெறும் இவ் விழாவை வவுனிக்குளம் நீர்ப் பாசனப் பொறியியலாளர் திரு. எஸ். கனகலிங்கம் அவர்கள் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார்.

வவுனிக்குளம் கி. மு. சங்க மைதானத்தில் நடைபெறும் இவ்விழாவில் நாடகப்போட்டியைத் தொடர்ந்து "கராட்டி" "விவாத அரங்கு" "தனி நபர் நவரச நடிப்பு" ஆகியனவும் நடைபெறும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழ்ஈழப் போராட்டத்தை முறியடிக்க சிங்கள நாட்டில் வாழும் தமிழர்களை பயணக் கைதிகளாக பயன்படுத்துகிறது சிங்கள பௌத்த ஏகாதிபத்தியம்!''

## சிந்தனைச் சிற்பி தரும் அரசியல் விளக்கம்!

"உத்தியோகம், தொழில், முதலீட்டு வாய்ப்புக்களைத் தென் இலங்கையில் இழப்பதா என்று எண்ணும் தமிழர்கள் இன்னமும் இருக்கவே செய்கிறார்கள். ஆடு மாடு, கோழி, பன்றி இவற்றிற்கு உணவு தந்து கொழுக்க வைப்பது அவற்றின் மீதுள்ள பச்சாதாபத்தாலோ அல்லது பாச உணர்வினாலோ அல்ல. அவற்றை உணவாக மாற்றி மேசைக்கு கறியாக அனுப்புவதற்காகவே பதினைந்து இருபது வருடங்களுக்கு மேலாக தென் இலங்கையில் சுருட்டுக்கடை, மளிகைக்கடை வைத்து உத்தியோகம் பார்த்து தேடிய தேட்டங்களை கடந்த 1977 வன்செயல் சம்பவங்களின்போது யாராலும் தமிழ் ஈழத்துக்கு எடுத்து வரமுடிந்ததா? அல்லது தென் இலங்கையில்தானும் அதன் பலனை அவர்களால் அனுபவிக்க முடிந்ததா? அவர்களது அத்தனை வருட உழைப்பும் அவம் போகவில்லையா?

தமிழர் சிங்களப் பிரதேசங்களில் வாழ அனுமதிக்கப்படுவது உயிர்ப்பிணையாக அல்லது பணயக் கைதிகளாகத்தான்! இந்த உண்மையை ஒவ்வொரு தமிழரும் உணர்ந்து கொள்ள வேண்டும். தமிழ் ஈழத்தின் மீட்புக்கான போராட்டம் ஆரம்பிக்கப்பட்டால் தென் இலங்கையில் தமிழர் உயிருக்கு தமிழர் முதலீடுகளுக்கு ஆபத்து என்ற நிலையை பணயக் கைதிகள் என்று சொல்லாது வேறு எப்படி வர்ணிப்பது. ஆகவேதான் தென் இலங்கையில் தமது முதலீடுகளைத் தொடர்ந்தும் வைத்துக்கொள்ள விரும்புபவர்கள், தமிழ் ஈழத்துக்கு படிப்படியாகவேனும் அவற்றை மாற்ற விரும்பாதவர்கள் தொடர்ந்தும் சிங்களவர் கையில் பணயக் கைதிகளாக இருக்க விரும்புகிறவரையில் தமிழ் ஈழத்தின் துரோகிகளாக தாம் மாறுவதை மறந்துவிடக்கூடாது. இவ்வித சிந்தனைத் தெளிவு எம் ஒவ்வொருவரிடமும் ஏற்பட வேண்டும். மகாத்மா காந்தியடிகள் வெள்ளையனே வெளியேறு என்று கூறினார். எம்மால் அப்படிச் சொல்ல முடிகிறதா? சிங்களவனே வெளியேறு என்று தமிழ் ஈழத்தில் தாம் குரல் எழுப்புவதற்கு முன்பே சிங்கள நாட்டைவிட்டு ஒவ்வொரு தமிழரும் வெளியேறிவிட வேண்டும். தமிழர் சிங்கள நாட்டில் வாழ்ந்து கொண்டு தமிழ் ஈழத்தில் சிங்களக் குடியேற்றத்தை எதிர்ப்பதில் நியாயம் இல்லை, அரசாங்கப் பணத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் குடியேற்றங்களையே நாம் எதிர்க்கிறோம் தனிப்பட்டவர்கள் குடியேற்றங்களை அல்ல என்று நாம் இனியும் கூறிக்கொண்டிருக்கக்கூடாது. தென் இலங்கை வாழ் தமிழர் தமிழ் ஈழம் நோக்கி குடிபெயரல் மிக மிக அவசியம்.

முன்பு எம்முள்ளும் சிலர் தமிழ் ஈழம் சுதந்திரம் அடைந்த பின்னரும் சொற்ப தமிழர் சிறீலங்காவில் தொடர்ந்தும் வாழ முடியுமென்று கருதி வந்தனர். தமிழ் ஈழத்தில் எப்படி சிங்களவர்கள் சில இடங்களில் சிறுபான்மையினராக வாழ நேரிடுமோ அதே போன்று சிறீலங்காவிலும் தமிழர் சொற்ப தொகையினர் சிறுபான்மையினராக வாழ முடியுமென்று நம்பினர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இன்றும் அப்படி எண்ணுகிறது. மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு 1977 வன்செயல் நிகழ்ச்சிகளின்போது நேர்ந்தகதி மேற்படி எண்ணத்தை மாற்றியிருக்கவேண்டும். மலையகத் தமிழர்கள் கூட ஒன்றில் தமிழ்ஈழத்தை அல்லது இந்தியாவையே தமது எதிர்கால வாழிடமாக மாற்றிக் கொள்ள வேண்டும். தென் இலங்கையில் இருந்து தமிழர் வெளியேற வேண்டும். அப்படி வெளியேற மறுப்பவர்கள் தமிழ் ஈழத்துக்கு துரோகிகளாக பணயக் கைதிகளாகவே சிங்களவர் கையில் பயன்படுவார்கள்'' என்று,

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பணியகத்தில் இடம்பெற்ற வாராந்தக் கருத்தரங்கில் உரை நிகழ்த்துகையில் சிந்தனைச் சிற்பி திரு. சி. கதிரவேற்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்;

"தமிழ் ஈழம் மீட்கப்பட தமிழரிடம் சிந்தனைத் தெளிவு ஏற்பட வேண்டும். இலங்கை ஒரு நாடல்ல; சிங்கள நாட்டையும் தமிழ் நாட்டையும் இணைத்தவர்கள் ஆங்கிலேயர்தாம், ஒருவேளை இரண்டு வேறு நாடுகளாக இருந்தால் இரு வேறு தேசாதிபதிகளுக்கு சம்பளம் தரவேண்டுமோ என்று நிர்வாக வசதிக்காக அப்படி அவர்கள் இணைத்திருக்கலாம், இந்த நாட்டுக்கு சுதந்திரம் வந்தது சோல்பரி அரசமைப்புத் திட்டத்தின் கீழ்தான். அந்த சோல்பரி அரசமைப்புத் திட்டத்தைக்கூட தமிழ் மக்கள் நிராகரித்தனர். அதனை ஏற்றுக்கொண்ட பிரதிநிதிகளில் திரு. நல்லையா ஒருவர் நீங்கலாக ஏனையோர் யாவரும் 1947 பொதுத் தேர்தலில்படுதோல்வியடைந்தனர். சட்ட ரீதியாகவும், வரலாற்று ரீதியாகவும், சமூக மத ரீதியாகவும் தமிழ் ஈழம் வேறு சிங்கள நாடு வேறு தமிழ் ஈழத்தின் இறைமை தமிழ் ஈழ மக்களிடமே உண்டு. அதனை அவர்கள் யாருக்கும் தானஞ் செய்ய ஆயத்தமாகவில்லை. தமது இறைமையை உபயோகித்து தமிழ் ஈழத்தை மீட்கும் பணிக்கே அவர்கள் தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார்கள்.

—3-ம் பக்கத் தொடர்

தலைவராகத் தெரிவியுங்கள் ஆதரிப்போம் என்று தந்திரமாக மாற்றான் உரைப்பது

தமிழ் ஈழத்தை ஏற்றுக் கொள்ளாத சிங்களவர் உண்மையானவர்களாக இருக்கலாம் ஏற்றுக்கொள்ளுகிறோம் எமது ஆதரவு வேண்டுமானால் தலைமையை மாற்று என்று கூறுபர்கள் போலிகள், உண்மையாக தமிழ்ஈழ விடுதலைப் போரை ஆதரிப்பவர்கள் நிபந்தனை விதிக்கமாட்டார்கள், நிபந்தனையற்ற ஆதரவையே நல்குவர்.

ஆகவே தமிழ்ஈழத்தை ஆதரிக்கிறோம். தமிழ்ஈழ விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்கிறோம். ஆனால் அதன் தலைமையை ஏற்றுக் கொள்ள மறுக்கிறோம் என்று இச்சகம் பேசுவோரை நம்பாதே! தம்பி ஏமாறாதே!'' என்று பா. உ., திரு. கதிரவேற்பிள்ளை அழுத்தமாகக் குறிப்பிட்டார்.

—1-ம் பக்கத் தொடர்

அத்தகைய சுதந்திரன் தமிழீழத்திலிருந்து வெளிவரத் தொடங்கியிருப்பது, தமிழீழ விடுதலை வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க சம்பவமாகும்; சுதந்திரன் தமிழ் ஈழத்துக்கு வந்திருப்பது, தமிழ் இனத்தின் சுதந்திரமும் மிக விரைவில் கிடைக்கும் என்பதற்கு காட்டியம் கூறுவதாக அமைந்துள்ளது. சுதந்திரன் பத்திரிகை மேலும் சீரும் சிறப்புமாக வளர்ந்துதமிழ்ப் பணியாற்ற என்னுடைய வாழ்த்துக்களைக் குவிக்கிறேன்."

அலோசியஸ் மாஸ்டரும் உரையாற்றினார். சுதந்திரன் ஆசிரியர் விழாவுக்கு வந்திருந்தோருக்கு நன்றி தெரிவித்து உரையாற்றினார். திருமதி மங்கை அமிர்தலிங்கம் அவர்களின் "தங்கமா மணித் தமிழ் ஈழம்'' என்ற தேசிய கீதத்துடன் விழா நிறைவு பெற்றது.

விழாவுக்கு வாழ்த்து தெரிவித்து, சாவகச்சேரி பா.உ' வி.என். நவரத்தினம், உடுப்பிட்டி பா.உ. திரு. க. இராசலிங்கம், த.வி.கூ. கொழும்புக் கிளைத் தலைவர் திரு. ஈழவேந்தன், எதிர்க்கட்சி முதல்வரின் செயலாளர் திரு. இ. பேரின்பநாயகம் ஆகியோருட்பட சுதந்திரன் அபிமானிகள் பலர் செய்திகள் அனுப்பியிருந்தனர்.

## எண்ணம்

### அமைச்சர் தேவாவுக்கு பணிவான வேண்டுகோள்!

'வருமுன் காப்பவனே மந்திரி' என்பது மந்திரிக்கு திருக்குறள் கூறும் வரைவிலக்கணம்!

அந்த அடிப்படையில், கிழக்கு மாகாணத்துக்கு — குறிப்பாக கல்குடாத் தொகுதிக்கு — மதுறுஓயா குடியேற்றத் திட்டத்தினால் ஏற்படக்கூடிய அபாயத்தை, ஆபத்தை எடுத்துக்காட்டி அமைச்சர் திரு. தேவநாயகத்தை தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் உசார் படுத்தியிருநதனர்.

அதாவது...'மதுறு ஓயா' திட்டத்தில் அரசாங்கம் பெரிய அளவில் சிங்களக் குடியேற்றத்தை நடத்தக் கூடும்; அப்படி நடைபெறுமானால். கல்குடாத் தொகுதியையே தமிழர்கள் இழந்துவிடுகின்ற ஆபத்தான நிலை ஏற்படும்; இப்படியொரு நிலை ஏற்படாமல் தடுக்க முன் கூட்டியே திரு. தேவநாயகம் அவர்கள் நடவடிக்கை யெடுக்கவேண்டும்; அதாவது வந்தபின் வேதனைப்படுவதைவிட வருமுன் காக்கவேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி நட்பு அடிப்படையில் நல்லெண்ண அடிப்படையில், திரு. தேவநாயகமும் ஒரு தமிழர் — சிங்களக் குடியேற்றங்களின் அபாயத்தை உணர்ந்தவர் என்றமுறையில் மட்டக்களப்பில் நடைபெற்ற கூட்டணியின் பொதுக்கூட்டத்தில் எச்சரிக்கை விடுத்தது.

கூட்டணியின் இந்த எச்சரிக்கைக்கு திரு. தேவநாயகம் அவர்கள் சர்வசாதாரணமாக நாளேடு ஒன்றில் பின்வருமாறு பதிலளிக்கிறார்!—

"மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்'' என்பதுபோல தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு குடியேற்றம் என்றதும் எப்பொழுதும் சிங்களக் குடியேற்றமே கண்முன் நிற்கிறது; மதுறு ஓயாத் திட்டத்துன் கீழோ அன்றி வேறெந்தத் திட்டத்தின்கீழோ கல்குடா தொகுதியில் சிங்களக் குடியேற்றம் நடைபெறாது.''

இதுதான் திரு. தேவநாயகத்தின் திருவாசகமாகும்!

திரு. தேவநாயகத்தின் இந்தப் பதில், கடந்த காலங்களில் சிங்கள ஆட்சியாளருடன் ஒத்துழைத்துவந்த தமிழ் பேசும் ஒத்துழைப்புத் தம்பிரான்கள், சிங்களக் குடியேற்றம்பற்றி பிரச்சினை கிளப்பப்பட்டபோதெல்லாம் அளித்துவந்த அதே பதிலின் சாயலையே ஒத்திருக்கிறது.

1950, 1951-ம் ஆண்டுகளிலேயே திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தின் பேராபத்தை உணர்ந்து — கல்லோயாத் திட்டத்துக்கு அத்திவாரமிடப்பட்டபோதே— எச்சரிக்கை கொடுத்தனர் அமரர் தந்தை செல்வா, அமரர் வன்னியசிங்கம், அமரர் டாக்டர் நாகநாதன் போன்ற பெருந்தலைவர்கள். ஆயினும் அவர்களின் எச்சரிக்கை — அவர்களின் தீர்க்கதரிசனம் அன்று அலட்சியப்படுத்தப்பட்டது; புறக்கணிக்கப்பட்டது. யாருடைய காதிலும் ஏறவில்லை.

சிங்கள அரசாங்கத்தின் மந்திரி பதவி சுகத்தில், அதிகார போதையில், மயங்கிக்கிடந்த அன்றைய தமிழ்த் தலைவர்களும், முஸ்லிம் தலைவர்களும் அன்று தமிழரசுக் கட்சித் தலைவர்கள் சிங்களக் குடியேற்றம்பற்றி எச்சரிக்கை செய்தபோது — இன்று திரு. தேவநாயகம் கூறுகின்ற பாணியில்தான் — தமிழரசுக் கட்சித் தலைவர்களை பார்த்துக் கேலிசெய்து சிரித்தனர்; சிங்களக் குடியேற்றம் பற்றி தமிழரசுக் கட்சியார் பேசுவதெல்லாம் வெறும் பிதற்றல் என்றனர்; ஏளனம் செய்தனர்.!

ஆனால் நடந்தது என்ன என்பதை இன்று நாம் அறிவோம்; நாடறியும், கல்லோயா, அல்லை, கந்தளாய், மூதூர், திருகோணமலை; பதவியா போன்ற இடங்களில் சிங்களக் குடியேற்றம் பிரமாண்டமான அளவில் நடைபெற்று கிழக்கில் இரண்டு தனிச் சிங்களத் தொகுதிகளும் உருவாக்கப்பட்டுவிட்டன: முப்பது ஆண்டுகளுக்குமுன் 10,000 பேராக கிழக்கு மாகாணத்திலிருந்த சிங்களவர் தொகை இன்று இலட்சக்கணக்காக பெருகிவிட்டதென்றால், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தின் பெறுபேறுதான் இது என்பதை திரு. தேவநாயகமோ வேறு யாருமோ மறுக்கமுடியாது! ஆரம்பத்திலே தந்தை செல்வா விடுத்த எச்சரிக்கையை அனைவரும் செவிமடுத்திருந்தால்! இந்த நிலையை ஓரளவு தடுத்திருக்கமுடியும்.

எனவே திரு, தேவநாயகத்துக்கு பணிவோடு என்று கூறுகிறோம்.

இது அரசியல் கொள்கை சம்பந்தப்பட்ட அல்லது அரசியல் போட்டி பிரச்சினையல்ல!

இது நமது நிலத்தை — நமது இனத்தின் தாயகத்தை காக்கின்ற பிரச்சினை!

தமிழர் விடுதலைக் கூட்டணியை வேண்டுமானால் நீங்கள் கிண்டல் செய்யுங்கள் — அதுபற்றி நாம் கவலைப்படவில்லை!

ஆனால் காரியத்தை கோட்டைவிட்டு விடாதீர்கள் — ஆரியக் கூத்து ஆடினாலும் காரியத்திலே கண்ணும்கருத்துமாக இருங்கள்!!

மதுறுஓயா சிங்களக் குடியேற்றத்துக்கு உங்களுக்கு தெரியாமலே சதித் திட்டம் தீட்டப்படலாம்!

யூ. என், பி. ஆட்சியின் பழைய திட்டமிடப்பட்ட சூழ்ச்சியும், சதியும் உங்களுக்கு தெரியாமலிருக்கலாம்.

[illegible]ப்பதில் சற்று விழிப்பாக இருங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு-12, 194 ஏ. பண்டாரநாயக்கா வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு